# தற்குறிகளே! விவாதிக்கலாமா? அறையிலா? அம்பலத்திலா?

**"….Vijay, a film actor a demagogue with nothing in his head how to solve the massive socio- economic problems of Tamil Nadu, is going to be the next of Tamil Nadu. Tamilans will soon be disillusioned with this idiot"….. என்று முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி மார்க்கண்டே கட்ஜூ தனது எக்ஸ் வலைதளத்தில் விமர்சனம் செய்திருந்தார். "மூளையில் எதுவும் இல்லாத சினிமா நடிகர் ஜோசப் விஜய் எனும் முட்டாளால் தமிழர்கள் விரைவில் ஏமாற்றம் அடையப் போகிறார்கள்; அவர் ஒரு "முட்டாள்" என்றும் "கோமாளி" என்றும் பதிவிட்ட அவர்; "தமிழ்நாட்டின் பெரிய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான எந்த விதஓர் அறிவோ, புரிதலோ, திட்டமோ இல்லாத ஒரு முட்டாள்" என்றும் ஜோசப் விஜய் பற்றிக் குறிப்பிட்டு அடையாளப்படுத்தி இருந்தார்.**

**மேலும், "அவர் ஒரு ஏமாற்றுக்காரர்; மோசடி பேர்வழி என்றும்; வெளிப்படையாகவே குற்றம் சாட்டினார். அத்துடன், "விஜய் மீதும், அவரது கவர்ச்சி அரசியல் மீதும் தமிழ்நாடு மக்கள் வைத்துள்ள மாயை நம்பிக்கை விரைவில் உடைந்து மக்கள் பெரும் ஏமாற்றம் அடையப் போகிறார்கள்" என்று தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்ததுடன்," விஜய் ஒரு போலி வாக்குறுதி அளிக்கும் 'ஹாமிலினி' குழல் ஊதி போன்றவர்; மக்களைப் பேரழிவிற்கு அழைத்துச் செல்வார்" என்று கடுமையாகவே தனது கருத்தாகப் பதிவில் சாடியிருந்தார். நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ தந்த வாசகங்கள் இப்பொழுது உண்மையாய் இருக்கின்றன!**

**கடந்த செப்டம்பர் 3, வியாழக்கிழமை அன்று நடந்த சட்டமன்ற விவாதத்தில் காவல்துறை மானியத்தின் போது, ஜோசப் விஜய்யின் தலைமையிலான த.வெ.க. ஆட்சியில் நடைபெற்றுள்ள சட்ட ஒழுங்குச் சீர்கேடுகள் பற்றி அடுக்கடுக்காக 15 கேள்விகள் எழுப்பி எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் எடுத்து வைத்தார். அக் கேள்விகளுக்கும் உரியமுறையில் நேரடியாகப் பதில் சொல்லாமல்; ஜோசப் விஜய் தனிப்பட்ட முறையில், தான் ஒரு ஜமுக்காலத்தில் வடிகட்டிய முட்டாள் எனும் தற்குறி என்பதை நிரூபிக்கும் வகையில் அவை களத்தில் இல்லாத தலைவர்களை முன்னாள் முதல்வர்களான கலைஞர், மு.க.ஸ்டாலின் மற்றும் முரசொலி மாறன் போன்றோர் மீது உண்மைக்கு மாறான, பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்திப் பேசியுள்ளார்.**

சட்டப்பேரவை விதி 42 உட்பிரிவுகள் 6,7,8,9 ஆகியவற்றுக்கு எதிரான கருத்துக்களைப் பேசி உள்ளார். (42. In order that a. question may be atmissibl, it must satisfy the following conditions ….) பல்லாவரம் தொகுதி திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி குடும்ப விவகாரம் நீதிமன்ற விசாரணை நிலுவையில் இருக்கும் போது; அது பற்றியும் சட்டமன்ற விதி மீறிப் பேசி உள்ளார். (தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 92 (i) (ii) எதிரானது, இப்படிப் பேசிய முதல்வர் ஜோசப் விஜய் மீது உரிமை மீறல் பிரச்சினையே கொண்டு வர முடியும்.

தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண் 92: (i) நீதிமன்ற விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவும் கூடாது. (ii) உறுப்பினர் எவரையும் தனிப்பட்ட முறையில் தாக்கக் கூடாது (A member while speaking must not: (i) give his opinion about or refer to any matter on which a judicial decision is pending; (ii) make a personal charge against a member….). விதிகள் இப்படிச் சொல்லும் போதும், அரசியலமைப்புச் சட்டம் உறுப்பு 211 கூறும் விதியை மீறியும், எப்படி தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய், அவையில் இல்லாத தனி நபர்களைப் பற்றி விமர்சித்தும், நீதிமன்றப் பொருள் குறித்தும் பேசினார்? இதற்கு அவைத் தலைவர் எப்படி அனுமதி அளித்தார்? என்பது குறித்துச் சட்டக் கேள்விகள் எழுகின்றன.

தேர்தல் பிரச்சாரப் பொது மேடைகளில் பேசுவது போல, அவரது பேச்சு சட்டமன்றத்தில் இடம் பெற்றது. போலீஸ் மானிய கோரிக்கையில் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு உரிய எந்த விதப் பதில் அளிக்கவில்லை. மாறாக தனிமனித தாக்குதலை நடத்தினார். அவர் இன்னும் சினிமா நடிகராகவே வசனம் பேசி எழுதிக் கொடுத்ததைப் படித்துள்ளார். "மிசா" சட்டத்தில் கைதாகிச் சிறையில் இருந்த மு.க. ஸ்டாலின் பற்றி முதல்வர் ஜோசப் விஜய், உருவக்கேலி செய்து ஆவேசமாக பேசினார். இதுகுறித்து, விஜய்யின் அமைச்சரவைக்கு ஆதரவு தந்து கொண்டிருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் செயலாளர் வீரபாண்டியன், மூத்த தலைவர் பாலகிருஷ்ணன், திருப்பூர் எம்.பி. சுப்பராயன் வி.சி.க. பொதுச் செயலாளர் சிந்தனைச் செல்வன் போன்றோர் அனைவரின் எதிர்ப்பும் விஜய்யின் பேச்சால் கடுமையான கண்டனத்திற்குரியதாக அமைந்துள்ளன. முதல்வர் என்பவர் பிறருக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும்;

இவரோ அதற்கு மாறாகத் தனது விசில் அடிச்சான் குஞ்சுகளை, தற்குறிகளைத் திருப்திப்படுத்த எழுதிக் கொடுத்ததைத் தனது படத்தின் ஆடியோ ரிலீஸ் நிகழ்ச்சி போன்று பேசியிருக்கிறார். இதை எல்லாம் எதிர்த்துக் கேள்வி எழுப்பிய திமுக சட்டமன்ற உறுப்பினர்களைக் குண்டுக் கட்டாகத் தூக்கி வெளியேறுமாறு அவை காவலர்களுக்கு அவைத்தலைவர் உத்தரவிட்டுள்ளார். மக்களின் நலன் சார்ந்த சட்டங்கள், திட்டங்கள் நிறைவேற்ற வேண்டிய ஜனநாயக மாளிகையான பேரவையில் இப்படி இழிதகையான பேச்சுகளால் சட்டமன்ற மாண்புகளையும் கெடுத்துப் புதைகுழிக்குள் அனுப்பி வைத்து இருக்கிறார். தவறான தகவல்களை வீண் கருத்துகளைப் பேசிச் சட்டப்பேரவையைச் சண்டைமன்றமாகவே மாற்றி விட்டார்.

இந்தியப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தனக்கு இருந்த அரசியல் நெருக்கடியால் நாட்டில் நெருக்கடி நிலையைத் திணித்தார். அதனால் மிசா சட்டம் என்ற பெயரில் சிறைக் கொட்டடிக்குள் மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் பலரும் அடைக்கப்பட்டுச் சிறை அதிகாரிகள் வித்யாசாகர், 'கையும்' போன்றோரின் அத்துமீறல்களால் உயிர் போக்கும் கடுமையான தாக்குதல்கள் நிறைந்த இரத்தம் சிந்திய காயங்களுடன் சித்திர வதைக்கு உள்ளாகினர்.

இது குறித்துச் சிட்டிபாபுவின் சிறை டைரி, நீதிபதி இஸ்மாயில் விசாரணைக்குழு அறிக்கை, கேரளா கம்யூனிஸ்ட் தலைவர் நம்பூதிரி பாட் அறிக்கைகள், ஜெயபிரகாஷ் நாராயணன் பதிவுகள், பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் அறிக்கைகள் பேட்டிகள், ஏ.கே. கோபாலன் எழுதிய நெருக்கடி காலக் கொடுமைகள், ஜனதா கட்சித் தலைவர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் தரும் தகவல்கள், நீதியரசர் சந்துருவின் பேட்டி, தோழர் தியாகுவின் கம்பிக்குள் வெளிச்சங்கள், இலட்சுமணன் எம்.பி.யின் பாராளுமன்றப் பேச்சு, தலைவர் கலைஞரின் நெருக்கடிக் கால நெருப்பாறு, முரசொலி செல்வம் நெருக்கடி காலப் பதிவுகள் மற்றும் சர்க்காரியா விசாரணைக்குழு அறிக்கை. இப்படியான ஆவணங்கள் நெருக்கடி காலத்தைப் பற்றியும் தளபதி ஸ்டாலினின் வலி பற்றியும் வரலாற்றுப் பதிவுகளாக மண்டிக் கிடக்கின்றன. ஆனால், பல கட்சிகளில் பாய் விரித்துப் படுத்துப் பயனடைந்த நிர்மல் குமார்கள் போன்ற வழிப் போக்கன்களின் உளறல் மொழிகள் கேட்டுச் சந்தி சிரிக்கின்றன.

1975-77 கால அவசரக் காலப் பிரகடனத்தின் போது, எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீதான ஒன்றிய அரசின் அடக்கு முறைகளைச் சுட்டிக் காட்டும் விதமாக, முன்னாள் குஜராத் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தவரும், இந்நாள் பிரதமருமான நரேந்திர மோடி 2013ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று டுவிட்டரில் பதிவிட்டு இருந்தார் என்பதைக் கோயபல்ஸ் கூட்டச் சங்கிகள் அறிவார்களா? "During the dark days of emergency even families of opposition leaders were not spared. M.K. Stalin was jailed under draconian MISA just because his father Karunanidhi then CM of Tamil Nadu did not to fall in line".

"நெருக்கடி நிலையின் போது அன்றைய பிரதமர் இந்திரா காந்தி தலைமையிலான மத்திய அரசு கொண்டு வந்த (Maintenance of Internal Security Act (MISA) என்ற கடுமையான சட்டத்தின்கீழ் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் சென்னை மத்திய சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். அப்போதைய தமிழ்நாடு மாநில முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் அவசரநிலையைக் கடுமையாக எதிர்த்தார். மத்திய அரசுக்கு இணங்கிப் போக மறுத்த காரணத்தினால் தான்; அவரது மகன் மு.க. ஸ்டாலின் சிறையில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உள்ளானார்" என்பது தான்.." அவரது பதிவு.

நெருக்கடி காலக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுத்தவர்; வேட்டி கட்டிய ஒரே மாமனிதர்; அதுவும் முதல்வராக இருந்த கலைஞர் ஒருவர் தாம்! அதனால் தான் அவருக்கு எதிராக அரசியல் பழிவாங்கும் நோக்கில் திமுக ஆட்சி கலைக்கப்பட்டது. அத்துடன் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இரஞ்சித் சிங் சர்க்காரியா கமிஷன் போடப்பட்டது என்பதைத் தவிர, வேறு என்ன நீதி அதில் இருந்தது?

தமிழகத்தில் பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு, கலைஞரால் பாதுகாக்கப்பட்டு வந்த இயக்கம் தி.மு.க. வலுவான மாநில கட்சியான தி.மு.க.வை உடைப்பதற்கு பிரதமர் இந்திரா காந்தி செய்த சூட்சியின் காரணமாக, கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். மீது வருமானவரித்துறை மூலம் மறைமுகமான நெருக்கடி சூழ்ச்சிகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவாக எம்.ஜி.ஆர். பொதுவெளியில் தி.மு.க. வுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை எழுப்பி வெளியேறக் காரணமானார். அவர் விலகிய 17வது நாளிலேயே முதலமைச்சர் கலைஞர் மீதும், அவரது அமைச்சரவை சகாக்களான இரா. நெடுஞ்செழியன், செ.மாதவன், ப.உ. சண்முகம், அன்பில் தர்மலிங்கம், சாதிக் பாட்சா, ஓ.பி.ராமன், ஆதித்தனார் உள்ளிட்டோர் மீதும், அவர்கள் குடும்பங்கள் மீதும் அதிகார அத்துமீறல்கள், ஊழல்கள், சொத்து சேர்த்தல் என்று மொட்டையாக ஆதாரமற்ற, ஆவணங்கள் இல்லாத உண்மைக்கு மாறான பல்வேறு தலைப்புகளில் ஊழல் புகார்களைச் தயார் செய்து மாநில ஆளுநர் கே.கே. ஷா இடத்திலும், இந்திய குடியரசுத் தலைவர் வி.வி. கிரியிடத்திலும் கொடுக்கப்பட்டன. எம்.ஜி.ஆருக்கு ஒத்துழைப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எம். கல்யாணசுந்தரம், விஸ்வநாதன் போன்றோரும் புகார் மனுக்களைக் கொடுத்தனர்.

எம்.ஜி.ஆரும், எம்.கல்யாணசுந்தரமும் குடியரசுத் தலைவருக்குக் கொடுத்த புகார்களுக்கு மறுப்பளிக்கும் வகையில், கலைஞர் அவர்கள் அவற்றுக்குப் பதிலாக அனைத்தையும் 'நம்பிக்கை வாக்கு' எனும் புத்தகமாக்கி வெளியிட்டதுடன், சட்டசபையில் 12.12.1972 அன்று குற்றச்சாட்டுகளுக்கான பதிலையும் கூறினார். தி.மு.க. அரசுக்கு நம்பிக்கைத் தீர்மான வாக்கெடுப்புக்கு 172 வாக்குகளை பெற்று நிரூபித்துக் காட்டினார் கலைஞர்.

கலைஞர் ஆட்சியிலிருந்தபோது 1976 ஆம் ஆண்டு வரை, அமைச்சரவையில் இருந்து பதவி அனுபவித்து வந்த பலரும், பின்னர் எம்.ஜி.ஆர். கட்சியில் போய் சேர்ந்தனர். எந்த எம்.ஜி.ஆர். கலைஞருடைய அமைச்சரவையில் இருந்தவர்கள் மீது ஊழல் புரிந்தவர்கள் எனப் புகார் அளித்திருந்தாரோ, அவர்களில் பலர் எம்.ஜி.ஆர். கட்சியான அதிமுகவில் இணைந்தனர். குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட அவர்களை கட்சியிலும், ஆட்சியிலும் சேர்த்து எம்.ஜி.ஆர். பதவி அளித்தார். நாவலர் நெடுஞ்செழியன், ப.உ.சண்முகம், க.இராஜாராம், சத்தியவாணி முத்து, செ.மாதவன் போன்றோர் பதவி பெற்றதில் அடக்கம் என்பது பின்னர் நடந்த வரலாறாகும்.

"நெருக்கடி நிலைக்கு எதிராக, தி.மு.க. போட்ட தீர்மானங்களை வாபஸ் பெறுங்கள்; தி.மு.க. ஆட்சியின் பதவிக் காலத்தை ஓராண்டு காலம் நீட்டித்து தருகிறோம்"… என்று ஒன்றிய அமைச்சர் ஓம்.மேத்தாவை தமிழகத்திற்கு அனுப்பிய பிரதமர் இந்திரா, கலைஞரிடம் வாக்குறுதிகள் கேட்டிருந்தார். ஆனால், அவற்றை நிராகரித்த கலைஞர், "இந்திய ஜனநாயகமே முக்கியம்; எழுத்துரிமை, பேச்சுரிமை பறிக்கப்படக்கூடாது; அரசியல் சட்டத்தை பாதுகாக்க வேண்டிப் போராடிவரும் தலைவர்களைக் கைது செய்யக் கூடாது" என்ற ஒற்றைக் கோரிக்கையில் உறுதியாக நின்றார். அதனால் கோபம் அடைந்த இந்திரா காந்தியால் 1976 ஆம் ஆண்டு ஜனவரி 31 கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக எம்.ஜி.ஆர். (4.11.1972) எம். கல்யாணசுந்தரம்

(20.9.1972), நாஞ்சில் மனோகரன், ஜி.விஸ்வநாதன் (01.12.1975) தேதிகளில் ஆகியோர் கொடுத்த புகார் மனுக்களை உயிர் கொடுத்து ஒய்வு பெற்ற உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி இரஞ்சித் சிங் சர்க்காரியா என்பவர் தலைமையில் விசாரணை குழுவை (03.02.1976) ஒன்றிய அரசு அமைத்தது.

அதற்கான ஒன்றிய, மாநில புலனாய்வுக் குழுக்கள் விசாரணைக்குழு அமைக்கப்பட்டு, ஒன்றிய புலனாய்வுக் குழுவின் தலைவராக இராஜகோபாலனும் அவருக்கு கீழ் 5 அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். எதிர்வினையாற்றினார் கலைஞர். "அத்தனையும் பழைய புகார்கள். அவற்றுக்கான பதில்களைச் சட்டமன்றத்திலேயே அச்சடித்து கொடுத்து விட்டோம். இப்போது விசாரணை கமிஷனிடம் விளக்கம் அளிக்க ஒரு வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆகவே, விசாரணை ஆணையத்தை வரவேற்கிறேன்" என்று நெஞ்சு நிமிர்த்திச் சொன்னவர் தான் கலைஞர்.

கலைஞர் மீது கொடுக்கப்பட்டது பொய் புகார் என்பதற்குச் சாட்சியாக, ஒன்றிய அரசு நியமித்த காவல் துறை அதிகாரியான இராஜகோபாலன் தன்னுடைய பணி கால அனுபவங்கள் பற்றி எழுதிய புத்தகம் "என் காலச்சுவடுகள்" எனும் நூலில் கீழ்க்கண்டவாறு உண்மைச் செய்திகளைப் பதிவு செய்திருக்கிறார்.

**"கலைஞர் மீதான புகார் பட்டியல் மிகவும் நீளமானது; பல பக்கங்கள் இருந்தன; ஆனால், அவற்றில் பல புகார்கள் மேலெழுந்த வாரியாக அமைந்திருந்தன; கேள்விப்பட்டதை வைத்தே புகார்கள் தரப்பட்டிருந்தன; புகார்ப் பட்டியலில் தான் என்ன எழுதி இருக்கிறோம் என்பது பற்றிய செயல்முறை நுட்பங்கள் ஏதும் எம்.ஜி.ஆர்க்கு இருக்கவில்லை; அவரது நம்பிக்கைக்குரிய சிலர் தொகுத்துத் தந்த புகார் பட்டியலில் அவர் கையெழுத்து மட்டுமே போட்டு அனுப்பி இருக்கிறார் என்று தான் யூகிக்க முடிகிறது…"** என்று மிகத் தெளிவாக பொய் குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்தி இருக்கிறார்.



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

சிலர் மேடைகளிலும், வெளியிலும் விஞ்ஞான பூர்வமான ஊழல் என்று சர்க்காரியா சொன்னதாக, பொத்தாம் பொதுவாக சொல்கிறார்களே ஒழிய; எந்த இடத்திலும் அப்படிப்பட்ட வார்த்தைகளை, வரிகளை தனது அறிக்கையில் அவர் பயன்படுத்தவில்லை. தனிப்பட்ட முறையில் எம்.ஜி.ஆரின் ஆதரவாளராக இருந்த; கலைஞருக்கு எதிராக 'மக்கள் குரல்' ஆசிரியர் டி.ஆர். எனும் டி. இராமசாமி என்பவர் தான் எழுதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள்.

1977 ஆம் ஆண்டு மத்தியில் ஆட்சியும், காட்சியும் மாறின. தேர்தலுக்கு முன்னர் கலைஞர் மீது பொய் வழக்கு போட்டார்கள் விசாரணை கமிஷன் அமைத்தது சட்டமீறலானது என்றெல்லாம் பேசி வந்த தலைவர்கள் ஒன்றியத்தில் மொரார்ஜி தேசாய் தலைமையில் கூட்டணி ஜனதா கூட்டணி அரசு அமைந்தவுடன் இரண்டு ஆண்டுகள் கழிந்து சரண் சிங் பிரதமர் ஆனபோதும் இவர்கள் இருவர் ஆட்சியிலும், கலைஞர் மீது போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணையைப் பற்றி என்ன என்று மூச்சு விடவில்லை.

சர்க்காரியா கமிஷனில் குறுக்கு விசாரணை நேரில் ஆஜராகாமல் தவிர்த்ததற்கும், சேலம் கண்ணன் குறித்து எம்.ஜி.ஆர். அளித்த வாக்குமூலம் பின்னணி வரலாற்றுக் காரணங்கள் என்ன? விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்ட போதிலும், கலைஞர் வாளாவிருந்து விடவில்லை. தி.மு.க. சார்பில் உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞர் சாந்தி பூசன் உள்ளிட்டோர் புகார்தாரரான எம்.ஜி.ஆரை நேரில் அழைத்து குறுக்கு விசாரணை (Cross Examination) செய்ய வேண்டும் என வலுவாகக் கூறினார்கள். ஆனால், ஆரம்பகட்ட விசாரணைகளில்," புகார்தாரர்களையோ, அல்லது சி.பி.ஐ. சமர்ப்பித்த சாட்சியங்களையோ நேரடியாகத் தங்களுக்கு சாதகமாக குறுக்கு விசாரணை செய்ய போதிய உரிமையோ அல்லது உரிய சூழ்நிலையோ கமிஷன் தரப்பில் வழங்கப்படவில்லை" எனக் கூறித் திமுக தரப்பு சாந்தி பூசன் தலைமையிலான வழக்கறிஞர்கள் விசாரணையைப் புறக்கணித்து வெளியேறினர்.

கமிஷன் விசாரணை போது எழுத்துப்பூர்வமான பிரமாண பத்திரங்கள் (Affidavits) ஆவணங்களின் அடிப்படையிலோ முக்கிய விசாரணை நகர்ந்ததால், எம்.ஜி.ஆர். நேரில் கூண்டில் ஏறிக் குறுக்கு விசாரணை செய்யப்படுவதில் இருந்து விலக்கு அல்லது வாய்ப்பு இல்லாத நிலை உருவாக்கினர். மேலும், திமுக தரப்பு இந்த கமிஷனின் சட்டபூர்வமான தன்மையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் நாடியபோது இதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**சேலம் கண்ணனைப்** பற்றி எம்ஜிஆர் என்ன கூறினார் தெரியுமா? திமுக அரசு மீது ஊழல் புகார் ஆளுநரிடமும், குடியரசுத் தலைவரிடமும் புகார் மனு அளித்தவர் எம்ஜிஆர். ஆனால், இந்தப் புகார்கள் குறித்த சட்டப்பூர்வ மற்றும் நீதிமன்ற விசாரணைகளின் போது எம்ஜிஆர் அளித்த விளக்கம் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது என்பதை மறந்து விட முடியாது. "எனக்கு தனிப்பட்ட முறையில் எதுவும் தெரியாது; நீதிமன்றம் அல்லது கமிஷன் ஆவணங்களின் படி திமுக அமைச்சர்கள் மற்றும் கலைஞர் கருணாநிதி மீதான ஊழல் புகார்கள் குறித்த தனக்குத் தனிப்பட்ட முறையில் நேரடி ஆதாரங்களோ அல்லது விவரங்களோ எதுவும் எனக்குத் தெரியாது" என்று எம்.ஜி.ஆர். கூறித் தப்பித்தார்.

**"எனக்கு இந்த விஷயங்கள் விவரங்கள் அனைத்தையும் சேலம் கண்ணன் என்ற வழக்கறிஞர் தான் கொடுத்தார்; அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அவர் கூறியதை நம்பித்தான் அந்தப் புகார் மனுவில் அதைக் குறிப்பிட்டுக் கையெழுத்து போட்டேன்"** என்று எம்ஜிஆர் விளக்கம் அளித்தார்! இதனால், புகாரை எழுப்பிய முக்கிய தலைவரான எம்.ஜி.ஆரே தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது; வழக்கறிஞர் சேலம் கண்ணன் சொன்னதைத்தான் மனுவாக அளித்தேன் எனக் கூறியதிலிருந்தே இது அரசியல் உள்நோக்கம் கொண்ட பழிவாங்கல் நடவடிக்கை என்று அவ் வாசகங்களை அடிக்கோடிட்டு, கலைஞர் அமல்படுத்தினார். எம்ஜிஆர் போன்ற எதிரிகளின் பொய் முகமூடிகளை கழட்டி எறிந்து விமர்சிக்கும் வகையில் எடுத்துக்காட்டிட முக்கியக் காரணமாக கலைஞர் அரசியல் உலகில் தலைநிமிர்ந்து நின்றார்.

எம்ஜிஆர் வகையறாக்கள் கொடுத்த 54 புகார்களில் 27 புகார்கள் எடுத்து விசாரிக்கப்பட்டன. அதிலும் இரண்டுமட்டும் ஒன்றிய அரசு சிபிஐ விசாரணையில் புலனாய்வுத் துறையின் வழக்கை வழக்கறிஞர் நம்பீசன் நடத்தி வந்த போது, அவரே நீதிமன்றத்தில் ஆஜராகி "கருணாநிதி மீது தொடுக்கப்பட்ட இரண்டு வழக்குகளையும் தன்னால் தொடர்ந்து நடத்த முடியாது; காரணம், அவற்றுக்கான தகுந்த ஆவணங்கள், ஆதாரங்கள் ஏதும் இல்லை" என்று மனுத் தாக்கல் செய்தார். எனினும், தமிழக அரசு எம்ஜிஆர் சார்பில், மனுக்களை வாபஸ் பெறக்கூடாது என்று எதிர் தரப்பு மனு தாக்கல் செய்து இரண்டு வழக்கறிஞர்கள் வாதிட்டனர். விசாரணையின் முடிவில் 16 மே 1981 அன்று கலைஞர் மீது மத்திய புலனாய்வுத் துறை தொடுத்த வழக்குகள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது.

"எந்த இந்திரா காந்தி 1977இல் இந்த வழக்குகளால் திமுகவை பூண்டோடு அழித்துவிடலாம் என்று திட்டமிட்டுச் செயல்பட்டாரோ, அதே இந்திரா காந்தி 1980 இல் திமுகவின் ஆதரவைப் பெற்று பிரதமராகப் பொறுப்பேற்ற பின்னர், அவர் செலுத்திய விஷத்தை அவரே திரும்ப எடுத்துக் கொண்டார்"….. என்று கலைஞர் அவர்கள் உண்மை விளக்கத்தை உரக்கச் சொல்லி அரசியல் உலகத்திற்கு அறிவித்தார்.

இந்தியாவில் நிலையான ஒன்றிய அரசாங்கம் உருவாக்கப்பட1979 ஆம் ஆண்டு திமுகவுடன் காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு வைக்க இந்திரா உறுதிப்பூண்டார். அதற்காகச் சென்னை வந்திருந்தால் இந்திரா. கடற்கரை கூட்டத்தில் பேசுவதற்கு முன்பு 30 செப்டம்பர் 1979 அன்று செய்தியாளர்கள் இந்திராவைச் சூழ்ந்து கொண்டு கேள்விகள் எழுப்பினார்கள். சர்க்காரியா கமிஷன் பற்றி அதில் ஒன்று அமைந்திருந்தது. "கருணாநிதி மீதும், திமுக அமைச்சர்கள் மீதும் ஊழல் செய்தார்கள் என்று நீங்கள் தானே சர்க்காரியா கமிஷன் போட்டீர்கள்?. அந்தக் கட்சியுடன் கூட்டணியா?…." என்று கேட்டார்கள்.

அதற்குப் பதிலளித்த இந்திரா காந்தி **"இந்திய கம்யூனிஸ்ட், அதிமுக கட்சிகள் கொடுத்த நச்சரிப்புக் காரணமாகத்தான் என்னால் சர்க்காரியா கமிஷன் போட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது…"** என்று இந்திரா காந்தி நீண்ட விளக்கம் கொடுத்தார். மேலும் அவர் கூறும்போது, **"கமிஷன்கள் என்பவை வேடிக்கையானவை!கமிஷன் நடத்தும் விசாரணைகளைச் சினிமா படமாக எடுத்துத் திரையிட்டுக் காட்டினால், மக்களுக்கு மிகவும் பொழுதுபோக்காக இருக்கும்!"** என்று 'நச்' என்று இந்திரா காந்தி விளக்கம் சொன்னார்.

அன்று கடற்கரை மாநாட்டில் கலைஞரை வைத்துக்கொண்டு பேசும் பொழுது, "என்னை எதிர்ப்பதாக இருந்தாலும், ஆதரிப்பதாக இருந்தாலும் கருணாநிதி எப்போதும் துணிச்சலாக உறுதியாக செயல்படக் கூடியவர்; என் ஆட்சியில் தவறு நடந்து விட்டது; அதிகாரிகளால் அது போன்ற தவறுகள் நடந்து விட்டன; நாங்கள் தவறு செய்திருக்கிறோம்; அதை உணர்ந்து நாங்கள் செய்த தவறுகளை ஏற்றுக்கொண்டு, அந்தத் தவறுகளால் பாதிக்கப்பட்ட மக்களிடம் நாங்கள் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறோம்; நான் செய்த குற்றங்கள் மீண்டும் நடைபெறாது; ஆகவே, அதற்காக நான் வருத்தம் தெரிவிக்கிறேன்…" என்று மேலும் இந்திரா காந்தி பேசினார்.

உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் சாந்தி பூசன் தலைமையில் கழகத்திற்காக வாதாடிய வழக்கறிஞர்கள் குழுவின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளாத சட்ட நீதியற்ற நிலையில் தான்; சர்க்காரியா கமிஷனை அன்றைக்குப் புறக்கணித்து வெளியேறியது. அதன் பின்னர் சர்க்காரியா கமிஷனுடைய முடிவுகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கலாம்? என்பது பற்றித் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய அதிமுக ஆட்சியிலேயே ஆராய்ந்து அதன்படி முடிவு எடுக்கப்பட்டு; வீராணம் போன்ற பெரிய புகார்களை, அதிலே பண வரவு, செலவு நடைபெற்றதாகக் கூறப்பட்ட புகாரைச் சர்க்காரியா கமிஷனே ஏற்றுக்கொள்ளாத அந்தச் சூழலில்; அந்தப் புகார்கள் குறித்த நடவடிக்கை எடுக்க அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர், அப்போது அட்வகேட் ஜெனரலாக இருந்த வி.பி. இராமன் அவர்களிடம் எழுத்துப்பூர்வமாக ஆலோசனை கேட்டார்.

அதற்கு அரசு தலைமை வழக்கறிஞர் வி.பி. இராமன் முதல்வர் எம்.ஜி.ஆர்.க்கு எழுதிய கடிதத்தில், தமது சட்டக் கருத்தை எழுதிப் பதிவு செய்திருந்தார். Thiru. V.P. Raman the then Advocate General had offered opinion that it was neither advisable or possible to launch prosecution successfully on anybody for mere improperiety irregularity (அன்றைய அட்வகேட் ஜெனரல் வி.பி. இராமன் இது குறித்து சட்ட ஆலோசனை வழங்கும் போது, யார் மீதும் அதிகார ஒழுங்கீனத்திற்காகவோ, அதிகார துஷ்பிரயோகக் குற்றத்திற்காகவோ வழக்கு தொடர்வதற்கு இயலாது என்பதோடு, அதற்குச் சாத்தியக்கூறுகளும் இல்லை என்று 15.11.1977 அன்று தன்னுடைய கருத்தை எம்.ஜி.ஆர். அரசுக்குக் கூறியிருந்தார்) என்பது நினைவு கூரப்பட வேண்டும்.

அதற்குப் பின்னர் மீண்டும் ஒருமுறை 1979 ஆம் ஆண்டு முதலமைச்சர் எம்ஜிஆர் அட்வகேட் ஜெனரல் வி.பி.இராமனிடம், அதன் மீது வழக்கு தொடரலாமா? என்பதற்கு உரிய கருத்துரை வழங்குமாறு மீண்டும் கேட்டார். அப்போதும் அரசுத் தலைமை வழக்கறிஞர் வி.பி இராமன், 24.10.1979 அன்று தெரிவித்த கருத்துரையில் …."With the exception of allegation No. 11 (b) which related to Aerial spraying none of the Other allegations enquired into by the Sarkaria commission could be successfully pursued further In a criminal prosecution" (ஏரியல் ஸ்ப்ரேயிங் சம்பந்தப்பட்ட 11 (பி) குற்றச்சாட்டினைத் தவிர, சர்க்காரியா கமிஷனால் விசாரிக்கப்பட்ட வேறு எந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாகவும், குற்ற வழக்கு தொடர்ந்து வெற்றி பெற இயலாது") என்று தனது கருத்தை இரண்டாவது முறையாகவும் அரசுத் தலைமை வழக்கறிஞர் தெரிவித்து விட்டார்.

ஏரியல் ஸ்ப்ரேயிங் வழக்கை பொறுத்தவரையில் ஒன்றியக் குற்றப் புலனாய்வுத் துறையினரால் (CBI) விசாரிக்கப்பட்டு வந்த ஏரியல் ஸ்ப்ரேயிங் வழக்குச் சாட்சியங்கள், சான்றுகள், ஆவணங்கள் இல்லாததால் மத்திய அரசினாலேயே அவ்வழக்கும் திரும்பப் பெறப்பட்டு விட்டது. இதுதான் சர்க்காரியா கமிஷன் மீதான சூழ்நிலை. இதிலே 1988 ஆம் ஆண்டு வரை எனப் பல ஆண்டுகளாக எம்ஜிஆர் ஆட்சி நடந்த வந்த போதும், சர்க்காரியா கமிஷன் சம்பந்தப்பட்ட கோப்பிலே எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருந்தது. அதற்கு காரணம் அரசுத் தலைமை வழக்கறிஞர் இந்த வழக்கில் நிருபிக்கத் தகுந்த போதுமான சாட்சியங்கள், சான்றுகள், ஆவணங்கள் எதுவும் இல்லை என்று அளித்த சட்டக் கருத்து அடிப்படையிலே சர்க்காரியா கமிஷன் சம்பந்தப்பட்ட கோப்பிலே எந்த முடிவும் எடுக்கப்படாமல் விடப்பட்டது. கலைஞர் 1989இல் ஆட்சிக்கு வந்த பிறகு இவற்றையெல்லாம் பதிவு செய்து அரசின் கோப்பை வழக்கறிஞர்கள் சட்டக் கருத்தை வைத்து முடிவுக்குக் கொண்டு வந்தார்.

DMK ministry which came to power the state in January 1989 dropped further action on this subject on 23.11.1989 the basis on the opinion offered by the then Advocate General on 15.11. 1977 and 23 .10.1979 and as the previous election Government had not closed the case but kept them pending without a decision for a number of years … (1989 ஜனவரி மாதம் இந்த மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த திமுக அமைச்சரவை அதற்கு முன்பிருந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசால் எந்த முடிவும் எடுக்கப்படாமல் பல ஆண்டு காலத்திற்கு கிடப்பிலே போட்டு வைத்திருந்த கோப்பில் ஏற்கெனவே இருந்த அரசு அட்வகேட் ஜெனரல் அவர்கள் 15.11.1977 அன்றும், 23.10.1979 அன்றும் தெரிவித்திருந்த சட்டக் கருத்துக்களை அடிப்படையாக வைத்து தொடர் நடவடிக்கைக்கு எதுவும் எடுக்கத் தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது.

இது பற்றியெல்லாம் அரசியலில் எந்தக் கொள்கையும் கோட்பாடும் இல்லாத கோமாளியாக கோட்டையில் ஏறி இருக்கும் ஜோசப் விஜய், அரசியல் அரிச்சுவடி அறியாத நிழல் தேடி ஒதுங்கிய கோயபல்ஸ்களான நிர்மல் குமார்கள், ஆதவ் அர்ஜூனாக்கள் அறிவார்களா? சட்ட மன்றத்தைச் சண்டை மன்றமாக மாற்றி வரும் இவர்கள் ஆதாரம் அற்ற, ஆவணமற்ற குற்றச்சாட்டுகளைத் கூறி சட்டமன்றத்தை மாண்பை கெடுத்து வருவதோடு, மக்கள் மன்றம் பிரச்சினைகள் பேசாமல் சட்டமன்றத்தை சாக்கடையாக ஆக்கி வருகிறார்கள். **"சரக்கு இருந்தால் அவிழ்த்து விடு! இல்லை என்றால், சலாம் போட்டு ஓடிவிடு!"** என்று தற்குறி ஜோசப் விஜய் தலைமையிலான அமைச்சர்களுக்குத் திமுக அறைகூவல் விடுகிறது.

முரசொலி மாறனைப் பற்றி பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது ஜோசப் விஜய்க்கு? முரசொலி மாறன் தமிழ் மொழி காக்க இந்தித் திணிப்பை எதிர்த்துச் சிறை சென்ற மாணவர் பட்டாளத்தில் ஒருவர். 'மாநில சுயாட்சி' 'திராவிட இயக்க வரலாறு' 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?, 'அபாய விளக்கு' 'நாளை நமதே' என்பன போன்ற பல அரசியல் நூல்கள் சமுதாயக் கட்டுரைகள் எழுதி அறிவுச் செல்வங்களை வெளியிட்டவர். அண்ணா அவர்களால் பாராட்டப்பட்டவர், தான் நின்ற தென் சென்னைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகி முரசொலி மாறன் நிற்பதற்கு முன்மொழிந்தவர் பேரறிஞர் அண்ணா!. நெருக்கடி நிலையின் போது சென்னை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுச் சிறை அதிகாரிகளால் தாக்கப்பட்ட போது, அவரின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது.

அவர் உடைந்த முதுகெலும்புவுடன் தான் கடைசிவரை மேல் கோட்டு உடை உடுத்தி நடமாடிக் கொண்டிருந்தார்.

ஒன்றிய அமைச்சர் பொறுப்பேற்று தோஹா மாநாட்டில் பின் தங்கிய வளரும் (Developing countries) ஏழை நாடுகளுக்கான கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, ரஷ்ய, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளிடமிருந்து வளரும் நாடுகளை காப்பாற்றியவர். அந்த முரசொலி மாறன் மீது ஆதாரம் அற்ற குற்றம் சுமத்தி ஜோசப் விஜய் மற்றும் அவருடைய சகாக்கள் பேசுவது எந்த விதத்தில் நியாயம் இருக்கிறது?

முரசொலி மாறன் ஊழல் செய்தார் என்றால், அவருடைய மகன்கள் கலாநிதி மாறன் , தயாநிதி மாறன் தயாரித்த சன் பிக்சர்ஸ் (Sun Pictures) தயாரிப்பில், "'சர்க்கார்', 'பீஸ்ட்' என்ற படங்களில் நடித்து அதற்கான தொகையை வாங்கித் தன்னை ஸ்டாராக உயர்த்திக் கொண்டது எப்படி? ஊழல்வாதியின் குடும்பப் பணம் என்று நினைக்கவில்லையே ஏன்? எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினின் 'ரேட் ஜெயிண்ட் மூவிஸ்' (Red Giant Movies) தயாரித்த 'குருவி' என்ற படத்தில் தன்னை உயர்த்தி ஸ்டாராக்கி கொண்டது எப்படி மூடர்களே… முட்டாள்களே…? இதற்கு பதில் சொல்ல தயாரா?

கலைஞரைப் பற்றி ஒருமையில் பேசும் ஜோசப் விஜய் சர்க்காரியா குற்றவாளி கலைஞர்(?) என்று சொன்னால் கலைஞர் எழுதிய 'நீதிக்குத் தண்டனை' (1987), 'சட்டம் ஒரு விளையாட்டு', (1987), 'சட்டப்படி குற்றம்' (2011) என்பன போன்ற படங்களுக்கு உன் தந்தை பெருமைக்குரிய எஸ்.ஏ. சந்திரசேகர் இயக்குநராக இருந்து செயல்பட்டது ஏன்? அவை எல்லாம் சர்க்காரியா கமிஷன் குற்றவாளி எழுதிய கதை வசனம், படம் என்று தெரியவில்லையா?

ஆயிரம், ஆயிரம் மக்கள் பிரச்சினைகள் மண்டி கிடக்கும் போது; மக்கள் அறியாமல் தங்கள் வாக்குகளை அளித்ததன் காரணமாக கோட்டையில் கோமாளியாக உட்கார்ந்து கொண்டு; அது தீர்க்கவக்கில்லாத தெம்பு இல்லாத தற்குறிக்களுக்கு எல்லாம் வாய்ஜாலம் ஏன்? வம்பு, வழக்குகள் ஏன்? வரலாறு தெரியாமல் கலைஞர், அவரது குடும்பம், தி.மு. கழகம் இவற்றின் மேல் புழுதி வாரித் தூற்றினால் தி.மு.க. தொண்டன் எவனும் பொறுத்துக் கொண்டு புழுப்போல் இருக்க மாட்டான்; புதர் விட்டு வெளி கிளம்பிய பொங்கும் புலியாக மாறுவான்! பூகம்பம் போல் பிரளயத்தை ஏற்படுத்துவான். எந்தப் பூச்சாண்டிகளுக்கும் அஞ்ச மாட்டான்!